# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 1 இதழ் : 85 - 19.03.2023

ஈழப்பெண் போராளி கவிதைகளும் சங்க இலக்கியத்தில் பெண்களும்

அழகியலை முன்னிலைப்படுத்தும் அனுபவம் மிக்க படைப்பாளி குப்பிழான் ஐ.சண்முகன்

‘எல்லாமும் ஒன்றல்ல’ கட்டுரை நூல் வெளியீடு

மலையகத்தின் மூத்த கல்விமானும் இலக்கியவாதியுமான பிலிப் இராமையா உடனான சந்திப்பு



மலையக இலக்கியத்தில் முதல் ஆங்கில வரலாற்று நாவல்

தமிழ் முரசு
තමිල් මුරසු Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0771721880

# 'கவிதை'யைக் கொண்டாடுவோம்!

ஒரு மொழியின் வளர்ச்சி கவிதையில்தான் உள்ளது என்பதை மறுக்க முடியாது. கவிதையை நேசிக்காதவர்கள் எவருமே இருக்க முடியாது. நாம் எழுதும் வரிகளிலும் நாம் பேசும் வார்த்தைகளிலும் நம்மையறியாமலேயே கவி நிறைந்திருக்கும்.

ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு கவிஞன் ஒளிந்து கிடக்கின்றான். உள்ளத்து உணர்வுகள் தூரிகை வழியாக காகிதத்தை உரசுகையில் வண்ண ஓவியம் பிறக்கிறது. சொற்களை விஞ்சி ஒரு கற்பனை மூலமாக கல் மறைந்து ஒரு கற்சிலையாகிறது. கறைகள் படிந்த காதைகள் கூட கவிஞரால் காவியமாகின்றன.

அந்தக் கவிதையை போற்றுதற்குரிய நாளாக மார்ச் 21ஐ 1999ஆம் ஆண்டு உலகக் கவிதை தினமாக யுனெஸ்கோ அறிவித்தது.

பல நாடுகளில் பேச்சு நாகரிகம் கூட சரியாக இல்லாத காலத்தில் சங்கம் வளர்த்து கவிதை பாடிய மொழி நம் தமிழ் மொழி. அறம் பற்றியும் புறம் பற்றியும் கவிதை வடிவில் பல வரலாற்று உண்மைகளை கவிதை வழியாக அக்காலக் கவிஞர்கள் எழுதியிருந்தனர்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளிலுள்ள பல கவிதை நடை குறள்கள் உண்மையின் உயிர்நாடியாகவும் பண்பு, ஒழுக்கம், நட்பு, அறம் எனப்பல விடயங்கள் குறித்த படிப்பினையாகவும் உள்ளன. மெய் கவிதைகள் வழியாகவே கிடைத்தது வரலாறு என்றால் அது மிகையல்ல. வர்ணிக்கும் பொருட்டு கவிதையில் பொய் கலக்கலாம். ஆனால், மெய் கவிதைகள் தான் என்றுமே வரலாறாகவும் கல்வியாகவும் விளங்கும் என்பதில் எந்தவொரு சந்தேகமுமில்லை.

சொந்த எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் கருத்துகளை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த மற்றும் சுத்திகரிக்கப்பட்ட வழியே கவிதை.

ஒரு மொழியின் வளர்ச்சி கவிதையில்தான் உள்ளது என்பதை என்றைக்குமே மக்கள் மறந்து விடக்கூடாது. இளம் வயதிலிருந்து கவி பாடும் எண்ணத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு கடமையும் பாடசாலை சமூகத்தையே சார்ந்தது. பாடசாலைக் காலத்திலிருந்தே சுயமாக சிந்தித்து கவிதை எழுதும் கவிஞர்களாகவும் மாணவர்களை உருவாக்கும் தேவையும் இருக்கின்றது.

தமிழ் இலக்கியத்தின் அடிப்படை வடிவம் கவிதையாகும். இது காலத்திற்குக் காலம் அரசியல், கலாசாரம், அறிவியல் என்பனவற்றின் தாக்கத்தால் மாற்றமுற்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ச்சியடைந்து வந்துள்ளதுடன், இன்னும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்த கவிதை தினத்தை உலகளாவிய கவிஞர்கள் கொண்டாடுகின்றனர். இன்றைய தினத்தில் பல எழுத்தாளர்கள் நூல்களை வெளியிட்டு இத்தினத்தை சிறப்பிக்கின்றனர். அது மாத்திரமன்றி, இந்த சிறப்பு மிக்க கவிதை தினத்தில் கவிஞர்களுக்கு 'தமிழ் முரசு' தனது வாழ்த்துகளை பதிவுசெய்கின்றது.



## ரமழானை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சியாக 'பாரம்பரியம்'





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணியளவில் 'பாரம்பரியம்' நிகழ்ச்சி ஒலிபரப்பாகவுள்ளது. இந்நிகழ்ச்சியானது அதன் தயாரிப்பாளரின் எண்ணக்கருவில், எதிர்வரும் புனித ரமழான் மாதத்தைக் கருத்தில் கொண்டு, கடந்த காலங்களில் இலங்கை வானொலியில் முஸ்லிம் நிகழ்ச்சிகளாகவும் பிற்காலங்களில் இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையிலும் ஒலிபரப்பான கடந்த கால ரமழான் நிகழ்ச்சிகளின் பாரம்பரியத்தை பின்னோக்கிப் பார்க்கும் சிறப்பு நிகழ்ச்சியாக ஒலிபரப்பாக இருக்கிறது.

இந்நிகழ்ச்சியில் சிரேஷ்ட ஒலிபரப்பாளரும் முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளருமான அல்ஹாஜ் எஸ்.எம்.ஹனிபா, இலங்கை வானொலி சிரேஷ்ட பிரபல அறிவிப்பாளரும் நகைச்சுவை நாடகங்கள் எழுதி ஏராளமான நேயர்களை தன் வசப்படுத்திய முஸ்லிம் சேவையின் மூத்த கலைஞரும் எழுத்தாளருமான கலாபூஷணம் அல்ஹாஜ் மஹ்திஹசன் இப்ராஹிம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

இச்சிறப்பு 'பாரம்பரியம்' நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்து வழங்குகிவார்.




## உலக கவிதை தின கருத்தாடல்


உலக கவிதை தினத்தை முன்னிட்டு முகநூல் நேரலையில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு கருத்தாடலொன்று கவிஞர் மேமன் கவியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஹேமச்சந்திர பத்திரண, இபனு-அஸூமத், முல்லை முஸ்ரிபா ஆகியோர் உரையாற்றுவார்கள். இதன்போது 'யாரோ எமக்கு எதிராக நிற்கிறார்கள்' எனும் நூல் வெளியீடு இடம்பெறும். முதற்பிரதியை இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் பெற்றுக்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மலையகம் 200 - நீங்களும் விண்ணப்பிக்கலாம்

**இந்தியாவிலிருந்து வருகைதந்த நமது மூதாதையரின் வழி நின்று கலை, இலக்கியம் என்று அயராது பணியாற்றும் எம்மவர்களின் 'முகமும் முகவரியும்' கொண்ட ஒரு தொகுப்பு நூலாககொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இத் தொகுப்பில் உங்களது பெயர் விபரங்களை பதிவுசெய்ய விரும்பினால் 077-1877999 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அல்லது ponnuthurai51@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கலாம்.**

## நூலறிமுகமும் கலந்துரையாடலும்




திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மனோ சின்னத்துரை எழுதிய 'சிலங்கிரி' கதைகள் நூலின் அறிமுகமும் கலந்துரையாடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கை.சரவணன் தலைமை தாங்குகின்றார். அத்துடன் சு.ஸ்ரீகுமரன், சி.விமலன், வடகோவை வரதராஜன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

# மலையக இலக்கியத்தில் முதல் ஆங்கில வரலாற்று நாவல்

மலையகத்தில் முதன்முதலாக ஆங்கிலமொழியில் வரலாற்று நாவல் ஒன்று எழுதப்பட்டுள்ளது. மலையகத்தின் ஆங்கில மொழி படைப்பாளரும் கவிஞருமாகிய கவிமணி சி.வி.வேலுப்பிள்ளைக்குப் பிறகு, இப்படியொரு ஆங்கில இலக்கியப் படைப்பு மலையக இலக்கியத் தளத்தில் வெளிவந்துள்ளமை பெருமைக்குரிய தகவலாகும் என்பதுடம், மலையக இலக்கியத்துக்குக் கிடைத்துள்ள பெறுமதியுமாகும்.

'Sweat' (வியர்வை) என்னும் இந்த வரலாற்றுப் படைப்பை சாஹித்ய ரத்னா மு.சிவலிங்கம் வழங்கியுள்ளார். இந்த ஆங்கில நெடுங்கதை சென்ற வருடம் கொடகே நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இன்று வரை இந்நூலின் வெளியீட்டு விழா எங்கும் நடைபெற்றதாக அறிய முடியவில்லை.

இந்த வரலாற்று நாவல் மலையகத் தமிழரின் இலங்கை வருகை, பெருந்தோட்ட ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை, பிரித்தானிய காலனித்துவ இலங்கை நிர்மாணவேலை பற்றியதாக முதல் அத்தியாயத்திலும் அவர்களின் வாழ்க்கைநிலை, சமுதாய நிலை, பொருளாதார நிலை, அரசியல் உரிமைக்கான தேசியநிலை பற்றியதாக இரண்டாவது அத்தியாயத்திலும் தங்களின் எழுச்சிப் போராட்டங்களுக்குத் தடையாகவிருக்கும் சொந்த எதிரிகளான தொழிற்சங்க அரசியல்வாதிகள், உழைப்பைச் சுரண்டும் தோட்ட முதலாளிகள், நாட்டுரிமையை மறுக்கும் ஆட்சி யாளர்கள் ஆகியோரை அடையாளம் காணும் அறிவு குறித்தும் அவர்களுக்கு எதிராகச் செயற்படவிருக்கும் சிந்தனை மாற்றம் குறித்தும் மூன்றாவது அத்தியாயத்திலும் காட்டப்பட்டுள்ளன.

இலங்கை தேசத்தின் நாட்டு நிர்மாணத்துக்கும் பொருளாதாரத்துக்கும் முதல் காரணமாக இருந்த,



இருக்கின்ற மலையகத் தமிழரின் சமூகநிலை, இன்றுவரை உள்நாட்டுப் பாராளுமன்றத்திலும், சர்வதேச மட்டத்திலும் பேசப்படாத இந்தக் குறை ஓர் இலக்கியப் படைப்பின் மூலம் பிரசாரமாக தேசிய, சர்வதேச மட்டத்தில் செயற்படுவதற்கு இந்நூல் நிச்சயம் பிரயோசனப்படும் என்று நம்புகின்றோம்.

உலக வரலாற்றில் மலையகத் தமிழ் சமூகம், உலக அதிசயங்களை எழுதிவைக்கும் 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் இடம்பெறவேண்டுமென்று மு.சி. இந்நூலில் தனது கதைமாந்தர் மூலம் சொல்லிச் செல்கின்றார்!

''ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அதாவது, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கால்நடையாக வந்த அதிசயத்தை இயந்திரத்தை மிஞ்சிய உழைப்பைக் கொடுத்தும், பிச்சைக் காசை சம்பளமாகப் பெறும் அதிசயத்தை இரண்டு நூற்றாண்டுகளாக நில உரிமை மறுக்கப்பட்டுவரும் அதிசயத்தை, இரண்டு நூற்றாண்டுகளாக மனித அடிப்படை வசதியற்ற 10 அடி விஸ்தீரணமுள்ள அறைக்குள் பத்து குடும்ப உறுப்பினர்களோடு வசிக்கும் அதிசயத்தை, இரு நூற்றாண்டுகளாக நாட்டு மக்களாக ஏற்றுக் கொள்ளப்படாமல், தோட்ட மக்களாக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் அதிசயத்தை, இரு நூற்றாண்டுகளாக உள்ளூராட்சிக்குள் உள்வாங்கப்படாது, சட்டத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அதிசயத்தை, இந்த நாவல் பறைசாற்றும் தகவல்களை 'கின்னஸ்' பதிவேட்டுக்கு சமர்ப்பிக்கலாம்'' என்று மு.சி. நகைச்சுவையோடு கூறுகின்றார்!

நமது மூத்த படைப்பாளர் அமரர் தெளிவத்தை ஜோசப் சொல்லியது போன்று மு.சிவலிங்கம் என்னும் பெயர் இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் பொதுவாகவும், மலையக இலக்கிய உலகில் குறிப்பாகவும் முனைப்புற்றுத் திகழும் ஒரு முன்னணிப் பெயர் என்பது மனங்கொள்ளத்தக்கது.

மு.சி. தனது படைப்புகளுக்காக நான்கு முறை அரச சாஹித்ய விருதுகளையும் இருமுறை கொடகே தேசிய சாஹித்ய விருதுகளையும் காலி தேசிய சாஹித்ய விருதாக ஐந்து இலட்சம் ரூபா பண முடிச்சையும் முஸ்தபா அறக்கட்டளை மூலம் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கரிகாற்சோழன் விருதையும் சென்ற வருடம் இலங்கையின் அதி உயர் இலக்கிய விருதான சாஹித்ய ரத்னா விருதையும் பெற்று தமிழ் இலக்கிய உலகுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மு.சி. தனது தொழிலாக பத்திரிகை ஆசிரியர், பள்ளி ஆசிரியர், தோட்ட உத்தியோகத்தர் என்றும் ஈடுபாடுகளாக நாடகம், சினிமா, இலக்கியம் தொழிற்சங்கம், அரசியல் கட்சி செயலாளர், மாகாணசபை பிரதித் தலைவர் என சமூகத் தளங்களில் பரவலாகக் தடம் பதித்தவர்.

தற்போது 'பெருந்தோட்டத் தொழிற்சங்க வரலாறு' என்ற நூலையும் நாவல் ஒன்றையும் எழுதிக்கொண்டிருப்பதாக அறிகின்றோம்.

சுவாதி



**தமிழ்நாடு நந்தவனம் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'சாதனைப் பெண்கள் விருது-2023' சென்னை நுங்கம்பாக்கம் எலாஷா நட்சத்திர ஹோட்டலில் நந்தவனம் பவுண்டேஷன் தலைவர் சந்திரசேகரின் தலைமையில் 'தினகரன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ.செந்தில்வேலவன் முன்னிலையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.**

**இந்நிகழ்வில் அமிர்தரத்தினம் ருத்ரா, பிரபா அன்பு, சந்திரிகா நிரோஜன், தசாயினி ரந்தீர், கீர்த்தி மித்ரன், கவிதா பாரதி ஆகியோருடன் தெரிவுசெய்யப்பட்ட சாதனைப் பெண்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் திருமதி மரியம் ஹாசிம் உமரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.**

# ஒன்று கூடலும் கௌரவிப்பும்

வலம்புரி கவிதா வட்டத்தின் வகவம் ஸ்தாபகக்குழு இயக்க உறுப்பினர்களின் ஒன்றுகூடல் கொழும்பு கொம்பனித்தெருவில் அமைந்துள்ள வகவம் பணிமனையில் நடைபெற்றது. 2020ஆம் ஆண்டு ஸ்தாபகக்குழு இயக்கம் நடத்திய கவின் கமல் நினைவு சர்வதேச கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு 2022ஆம் ஆண்டு நடத்தி முடிக்கப்பட்டு, அதில் கலந்துகொள்ள முடியாமலிருந்த ஒரு சிலருள் அண்மையில் கட்டாரி லிருந்து தாயகம் திரும்பியிருந்த கவிஞர் மெய்யன் நட்ராஜை வகவம் ஸ்தாபகக்குழு சான்றிதழ், பணப் பரிசு, நினைவு மலர் ஆகியன வழங்கி கௌரவித்தது.

வகவம் ஸ்தாபகக்குழு இயக்கத் தலைவர் தாஸிம் அகமது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வகவம் ஸ்தாபகக்குழு பொதுச்செயலாளர் கலைக் கமல், பொருளாளர் டொக்டர் நூர்டீன், சிரேஷ்ட ஊடகவியலாளர் அஷ்ரஃப் ஏ. சமத் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி ஆசிரியர் எம்.சி.நஜ்முடீன் ஆகியோரும் கலந்துகொண்டனர். கவிஞர் மெய்யன் நடராஜ் எழுதி அண்மையில் வெளியிட்ட 'படிக்கட்டு', 'மூச்சுவிடும் காதுகள்' ஆகிய இரு கவிதை நூல்கள் அன்றைய நிகழ் வில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பல்வேறு கஷ்டங்களிலும் எதிர்நீச்சலிட்டு மீண்டிருக்கிறேன்!

## மூத்த கல்விமானும் இலக்கியவாதியுமான பிலிப் இராமையா

சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.தாயுமானவன் மற்றும் அவரது குழு

**தமது 90ஆவது அகவையைக் கண்டுகளிக்கவுள்ள எனது நண்பர் பிலிப் இராமையா எனது இளமைக்காலப் பள்ளித் தோழர். 1948 முதல் கந்தப்பளை மெதடிஸ்ட் மிஷன் பாடசாலையில் அவர் படித்தபோது எனது நண்பரானார். அப்போது ஏற்பட்ட நட்பு இன்றுவரை நிலைத்து நிற்கிறது. அவரது வாழ்க்கை ஒரு பெரிய வரலாறு. அத்தகைய ஒரு பெருந்தகையாளரை நானும் இன்னும் சிலரும் நேர்காணல் செய்து அவரது வாழ்க்கையில் நடந்தேறிய முக்கிய நிகழ்வுகளைக் குறித்துக் கொண்டோம். அவருடனன் பகிர்ந்துகெண்ட விடயங்களின் தொகுப்பே இது**

அவர் தனது வாழ்க்கை வரலாற்றையும் கடந்து வந்த பாதையையும் இன்றைய இளம் சமுதாயத்தினர் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் எங்களோடு உரையாடினார். நாங்கள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்குச் சலிக்காமலும் அலுக்காமலும் பயன் தரக்கூடிய வகையில் பதிலளித்தார். அவைகளில் அவரது இளமைக்காலம் தொட்டு இப்போதைய நிலை வரையிலான அவரது தனிப்பட்ட வாழ்க்கைக் குறிப்பு, பாலில் நெய் கலந்திருப்பது போல் மறைந்திருப்பதாக நாம் உணர்கிறோம்.

அவர் உடப்புஸ்ஸல்லாவை - றொக்லன்ட் தோட்டத்தில் 1933.03.22ஆம் திகதி பிறந்தார். தம்முடைய பிள்ளைப்பருவ வாழ்க்கை இன்னும் அவர் மனதில் பசுமையாக நிழலாடிக் கொண்டிருப்பதைக் கண்டோம். கந்தப்பளையில் உள்ள பாக்குத் தோட்டத்தில் (Park Estate) அவருடைய குடும்பத்தினருடன் கழித்த நாட்களை அவரால் மறக்க முடியவில்லை. அவர் பாக்குத் தோட்டப் பாடசாலையில் 3ஆம் வகுப்பு வரை கல்வி கற்றதாகக் கூறினார். அதுமட்டுமல்லாமல், கடுங்குளிரிலும் மரக்கறிப் பாத்திகளுக்கு நீர் பாய்ச்சியமை அவருக்கு ஒரு சுகமான அனுபவம் என மேலும் பல அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்.

**இவ்வேளையில் அவரது ஆரம்பக்கல்வி குறித்து அவரிடம் நாம் வினவினோம்.**

அடிப்படைக் ஆரம்பக்கல்வியைப் பெற அவர் கந்தப்பளை பாக்குத் தோட்டப் பாடசாலைக்குச் சென்றதாகக் குறிப்பிட்டார். அத்துடனில்லாது பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு. அழகரட்னம் இருந்ததாகவும், போதிய தளபாட வசதிகள் பாடசாலையில் இல்லாத சூழ்நிலையிலும் மணல் தரையில் அமர்ந்து கொண்டு அவர்கள் கற்றலை மேற்கொள்ள வேண்டியிருந்தமை மறக்க முடியாத நிகழ்வு எனவும் கூறினார். அக்காலத்தில் தோட்டப் பாடசாலைகள் தோட்ட நிர்வாகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழேயே இயங்கி வந்ததாகவும் 1970களைத் தொடர்ந்த காலப்பகுதியிலேயே அவை அரசுடைமையாக்கப்பட்டன என்றும் பொதுவாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களே பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டதாகவும், அவர் கற்ற பாக்குத் தோட்டப் பாடசாலையில் சில இந்தியக் கிறிஸ்தவ ஆசிரியர்களும் சேவை செய்தமை குறிப்பிடத்தக்கதெனவும் கூறினார். மேலும், அரசின் கொடைகளும் மாணவர் எண்ணிக்கைக்கேற்பப் பாடசாலைக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்ததாகவும் குறிப்பிட்டார். அத்துடன் மாணவர்களது அடைவு மட்டம், வருடாந்த மதிப்பீட்டுத் திட்டம் மூலம் மேற்கொள் எப்பட்டதாகவும் இதற்காகப் பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரி வருட இறுதியில் பாடசாலைக்கு விஜயம் செய்து எண், எழுத்து, வாசிப்பு (3Rs) மூன்றையும் மதிப்பீடு செய்ததாகவும் கூறினார்.


(படப்பிடிப்பு: ஆ.இரமேஷ்)

**மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை குறித்து அவர் பின்வருமாறு கூறியதும் மனங் கொள்ளத்தக்கது.**

மெதடிஸ்ட் பாடசாலை எனக்கும் தாயுமானவன் போன்ற ஏனைய மாணவர்களுக்கும் நல்லதொரு பயிற்சிக்கூடமாக விளங்கியது. இப்பாடசாலையின் தலைமையாசிரியர் திருமதி நவரட்னம் உள்ளார்ந்த செயல்திறன் மிக்க ஆசிரியராகத் திகழ்ந்ததுடன், எங்களுக்கு அறநெறி சார்ந்த ஒழுக்கக் கல்வியைக் கற்பித்து எங்களுடைய தனிப்பட்ட பண்புகளைக் கட்டியெழுப்ப உதவினார். அது மாத்திரமல்லாமல், கணித பாடத்தை எங்களுக்கு விருப்புடன் கற்பித்ததுடன், எங்களுடைய அறிவுசார்ந்த விழுமியத்தையும் வளர்க்கலானார்.

மலையகத்தின் மூத்த கல்விமானும் இலக்கியவாதியுமான பிலிப் இராமையாவின் 90ஆவது அகவை விழாவும் மலர் வெளியீடும் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நுவரெலியா - இராகலை ஹல்கரனோயா உயர் தேசிய பாடசாலையில், சட்டத்தரணி எஸ்.தாயுமானவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மெதடிஸ்ட் பாடசாலை எங்களுடைய வளர்ச்சியில் பாரிய பங்களிப்பைச் செய்ததுடன், அங்கேயே 5ஆம் வகுப்பு வரை கற்றோம். அது மட்டுமல்லாமல், நாங்கள் பாடசாலை நேரத்தில் தோட்ட வேலையிலும் ஈடுபட்டோம். ஆனாலும், தலைமையாசிரியர் திருமதி நவரட்னம் எங்களுக்குப் பாடசாலையிலேயே மாலை 6.00 மணி வரை கற்பித்துக் கொடுத்தார். வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடையே ஊக்குவிப்பதற்காகப் பணம் சேகரிக்கவும், அதன் மூலம் பயனுள்ள சில சஞ்சிகைகளை வாங்கவும் எங்களை வழிப்படுத்தினார். அத்துடன் இந்தியாவிலிருந்து வெளிவரும் 'கலைமகள்' மாதச் சஞ்சிகையை நாங்கள் இதன் மூலமே வாங்கினோம்.

**ஆசிரிய சேவைக்குள் அடியெடுத்து வைத்தது பற்றி அடுத்து வினவினோம்.**

அதற்கு அவர் பதிலளித்த விதமும் இலங்கைப் பிரஜாவுரிமையின்றி எமது மக்கள், குறிப்பாக மலையகப் பெருந்தோட்ட மக்கள் அனுபவித்த அவல நிலைமையையும் எடுத்துக் கூறியபோது எமக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அது குறித்து அவர் கூறுகையில், எனக்கொரு ஆசிரிய நியமனம் கிடைப்பதற்கான முன் அனுமதி கெக்கிராவ பெப்டிஸ்ட் மிஷன் பாடசாலையில் கிடைத்தது. அது ஒரு கலவன் பாடசாலையாகும். சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களும் கற்கும் இருமொழிப் பாடசாலையாக அது அமைந்திருந்தது. எனக்கு இலங்கைப் பிரஜாவுரிமை இன்மையால், கல்வித் திணைக்களம் மூலம் ஆசிரிய நியமனத்திற்கான கடிதம் மறுக்கப்பட்டது. பிரஜாவுரிமைப் பிரச்சினை ஒருவரின் அடிப்படைக் கல்வி உரிமையான பல்கலைக்கழகக் கல்வியை மறுக்கும் காரணியாக நீண்டு செல்கிறது. நான் வரலாறு, குடியியல் பாடங்களை 10ஆம் வகுப்பிற்கும் வரலாறு பாடத்தை ஏனைய வகுப்புகளுக்கும் கற்பித்தேன். பாடசாலை அதிபரின் அனுமதியுடன், மாணாக்கர் மூலம் சஞ்சிகை ஒன்றை வெளியிடுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அப்போது திரு.தியாகராஜா பாடசாலை அதிபராக இருந்ததுடன், திரு.சபாரட்னம், திரு.குமாரசிங்க போன்றோர் ஆசிரியர்களாக இருந்தமை ஞாபகமுள்ளது.

கெக்கிராவ பெப்டிஸ்ட் மிஷன் பாடசாலையும் என்னுடைய வாழ்க்கையில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆனாலும், பாடசாலையில் எனது ஆசிரியர் நியமனத்தை நிரந்தரமாக்க உறுதி எதுவுமில்லை. அந்நேரத்தில் உடப்புஸ்ஸல்லாவை கர்க்லிஸ் தோட்டத்திலிருந்து (Kirklis Estate) உதவி ஆசிரியர் நியமனத்தைப் பொறுப்பேற்குமாறு எனக்கு அழைப்புக் கடிதம் வந்தது. தினந்தோறும் இராகலையிலிருந்து கர்க்லிஸ் தோட்டப் பாடசாலைக்குப் போய் வந்தேன். கிறிஸ்தவ தேவாலய அருட்தந்தை மாணிக்கம் எப்போதும் போலவே எனக்கு உதவி செய்வதற்காகத் தயார்நிலையில் காத்திருந்தார்.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...)

## பல்வேறு கஷ்டங்களிலும்...
(4 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**தொடர்ந்தும் அவரது உயர் கல்வி குறித்து அளவளாவ வினாக்களைத் தொடுத்தோம்.**

யாழ்ப்பாணக் கல்லூரி அவரது வாழ்க்கையில் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் அவருக்குக் கற்பித்த விரிவுரையாளர்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதையும் நாம் கணப்பொழுதில் அறிந்து கொண்டோம். அந்த இனிமையான நினைவலைகளை பிலிப் மனம் திறந்து பின்வருமாறு தெரிவித்தார்.

நான் யாழ்ப்பாண கல்லூரியில் தொடர்ந்து கல்வி கற்பதற்காகப் புலமைப்பரிசில் கோரி விண்ணப்பித்திருந்தேன். கல்லூரியின் தலைவர் கலாநிதி எஸ்.கே.பங்கர் (Dr.S.K.Bunker) எனக்கு முழுநேர விடுதி வசதியுடன் கூடிய புலமைப்பரிசில் கொடுப்பதற்கு முன் வந்தார். நான் எனது பட்டையக்கற்கை நெறியைத் தொடர்வதற்காக யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்றபோது, அதன் சுற்றாடல் வனப்பைப் பார்ப்பதற்கு மனம் உந்தப்பட்டேன். கல்லூரியின் இடைநிலைப் பிரிவு பெஸ்ஸி செல்லையாவின் (Bassy Selliah) வழிகாட்டுதலுடன் இயங்கியதுடன், இளங்கலைப் பட்டதாரி மாணவர் பிரிவு கலாநிதி எஸ்.கே.பங்கர் இன் வழிகாட்டுதலுடன் இயங்கியது.

**அவருடைய குடும்ப வாழ்க்கை குறித்தும் பகிர்ந்துகொண்டார்.**


நான் 1972ஆம் ஆண்டில் இராகலையில் திருமணம் செய்து கொண்டேன். எனது திருமணத்திற்குப் பின் நான் கொழும்பு வனாத்தமுல்லை ரோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டேன். வனாத்தமுல்லை ஒரு பின்தங்கிய பகுதியாகும். மாணவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததுடன், பாடசாலைக்கு வருகை தருவதை வழமையாகக் கொண்டிருந்தனர். அதேவேளை ஆசிரியர்கள், மாணவர்களை மிக நன்றாக நேசித்ததுடன், அவர்களுடன் நல்லுறவைப் பேணுபவர்களாகவும் இருந்தனர்.

மீண்டும் நான் குறிப்பிட்ட அப்பாடசாலையிலிருந்து கொட்டாஞ்சேனையிலுள்ள ஒரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டேன். எனது சொந்த ஊரான நுவரெலியாவுக்கு இடமாற்றம் பெற்றுத் தருமாறு நான் கொழும்புப் பிரதேசக் கல்வித்திணைக்களத்திற்குப் பலமுறை விண்ணப்பித்தும், கல்வித்திணைக்களம் என்னை விடுவிக்கத் தயாராக இல்லை. ஆனாலும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் பின்பு நான் நுவரெலியா பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டேன்.

இடமாற்றத்தின்போது, எனக்கு நுவரெலியா சென்.சேவியர் பாடசாலை கிடைத்தது. பாடசாலை அதிபரான நொயல் நடேசன் ஆளுமை மிக்க மிக நல்ல மனிதர். அவர் ஆங்கிலப் புலமை மிக்கவருமாவார். ஒரு நல்ல அதிபரின் கீழ் பணிபுரிவது எனக்குப் பெருமை மிக்கதாக இருந்தது. மேலும், அவர் ஒரு நிர்வாகத் திறமை மிக்க சிறந்த நிர்வாகியாகவும் காணப்பட்டார். அதனால் சிங்கள, தமிழ் சமூகத்தினரின் மரியாதைக்கும் மதிப்புக்கும் பாத்திரமானார்.

**குடும்ப வாழ்க்கையுடன் பாடசாலை வாழ்க்கையையும் கூறிச் செல்லும் பிலிப், அவருக்குப் பட்டப்பின் கற்கைநெறியைத் தொடர்வதற்கு அழைப்புக் கடிதம் கிடைத்தவுடன் இவ்வாறு கூறுகிறார்.**

நான் இந்தப் பயிற்சிநெறியைப் பெறும் ஓர் அதிர்ஷ்டசாலியாவேன். ஏனென்றால், ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழியில் பயிற்றுவித்துப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் (TESL) ஒரு பட்டப்பின் கற்கைநெறியாகும்.




நாங்கள் ஆளுமை மிக்க விரிவுரையாளர்களை இப்பயிற்சிநெறியில் சந்தித்தோம். ரெஜி சிறிவர்தன சந்திப்பதற்கு மிக அரிதான மனிதர் ஆவார். அவரை என் வாழ்நாளில் சந்தித்தது நான் செய்த பெரும் பாக்கியமே. நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தை விரிவுரையாளர் ரெஜி சிறிவர்தனவிடமே கற்றேன். இலக்கியம் என்றால் என்ன என்பதை நான் அவரிடமே நன்கு விளங்கிக்கொண்டேன். அவருடைய நினைவுகள் இன்றும் என் மனதில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. கலாநிதி சில்வா, திருமதி கொத்தலாவல, திரு.வலாதர, திரு.சந்திரசேகரம் (உளவியல்), திரு.முத்துலிங்கம் (கல்வி அளவீடும் மதிப்பீடும்) போன்ற விரிவுரையாளர்களும் எங்களுக்குக் கற்பித்தனர்.

**இராகலை தமிழ்க் கலவன் பாடசாலை குறித்து மிகப் பெருமையுடன் கருத்துகளை முன் வைக்கிறார்.**

இராகலை தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராக திரு.செல்லத்துரை பணியாற்றிக் கொண்டிருந்தார். அவ்வேளையிலேயே அங்கு நான் மாணவனாகச் சேர்ந்தேன். அவர் அப்பாடசாலையின் கட்டுறுதியான அடித்தளத்தின் தூண் என்றால் மிகையாகாது. அவரே இராகலை தமிழ்க் கலவன் பாடசாலையைக் கட்டியெழுப்பிய பெருமகன். நான் இராகலை தமிழ்க் கலவன் பாடசாலையில் சேரும்போது, வகுப்புகள் தற்போதைய கொன் வெண்ட் கட்டடத்திலேயே இயங்கின. அப்பொழுது பாடசாலையில் எந்தவிதமான வளங்களும் இருக்கவில்லை. ஆனாலும், அதிபர் திரு.செல்லத்துரையின் வழிகாட்டுதலாலும் அர்ப்பணிப்பினாலும் ஆசிரியர்கள் எமக்குத் தரமான கல்வியை வழங்கினர். அவ்வேளையில் சில அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களும் பாடசாலையில் இருந்தார்கள். அவர்களுள் திரு.ஆறுமுகம், திரு. இராஜதுரை, திரு.மாணிக்கவாசகர், திரு & திருமதி வேலுப்பிள்ளை, அருள் செல்வநாயகம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பிலிப் அவரது பட்டப்பின் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த பின் கந்தப்பளை மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டதாகவும் இடமாற்றத்தை அவர் ஏற்றுக்கொண்டதாகவும் பெருமையுடன் எம்மிடம் கூறினார்.

**தொடர்ந்தும் பிலிப்பின் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டம் எதுவென அவரிடம் வினவினோம்.**

அவர் அது குறித்து மிகவும் சந்தோஷமாகக் கருத்துகளை எங்களிடம் பகிர்ந்து கொண்டார்.

அருட்தந்தை மரிய அந்தனியின் கூற்றுக்கிணங்க ஹட்டனில் சமூக நல நிறுவனம் (center for social concern) ஆரம்பிக்கப்பட்ட பிறகு நான் மாத்திரம் அங்கு தங்கியிருந்து வேலைகளைத் தொடங்கினேன். ஒரு சமூக சேவகனாக சில தளபாடங்களுடன் நிறுவனத்தில் பணி செய்ய நான் என்னைத் தயார்ப்படுத்திக் கொண்டேன். சில நண்பர்கள் நிலையத்துக்கு வரும்போது, அவர்களைச் சந்தித்துப் பயனுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுண்டு. பின்பு கிங்ஸ்லி என்னுடன் சேவை செய்ய இணைந்துகொண்டார். அவர் துடிப்பான இளைஞராக இருந்ததுடன், நிலையத்தில் ஒரு வளநபராகவும் காணப்பட்டார். நிறுவனம் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய விதத்தில் அர்ப்பணிப்புடன் காரியங்களைச் செய்வதில் முனைப்புக் காட்டினார். மேலும், நாங்கள் ஹட்டன் பகுதியிலுள்ள சில தோட்ட இளைஞர்களை சந்தித்துக் கலந்துரையாடுவதற்காகச் சில குறிப்பிட்ட தோட்டங்களுக்கும் சென்று வந்தோம்.

நாங்கள் ஆசிரியர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆங்கிலம் கற்பதற்கு நிலையத்தில் வகுப்புகளைத் தொடங்கினோம். மேலும், அவ்விரு சாராரும் சந்தித்துப் பொதுவான பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ள சமூக நல நிறுவனம் களமமைத்துக் கொடுத்ததுடன், அது பொதுவானதொரு இடமாகவும் காணப்பட்டது. அருட்தந்தை மரிய அந்தனி அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ஒத்தாசைகளையும் மனமுவந்து நல்கினார்.

**இன்னும் எங்களிடம் கூறாத விடயங்கள் இருந்தால் அதுபற்றி உரையாடலாமே என்றோம்.**

எங்களிடம் பின்வரும் விடயங்களைக் கூறி விடை பெற்றார். நான் சந்தனம் நிறுவனத்தில் கடந்த 12 வருடங்களாகப் பணியாற்றுகின்றேன். நிறுவனத்தை மக்களின் தேவை கருதி, கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்கமைத்துக் கொள்ளவும் எங்களுக்கு முடியுமாக இருந்தது. வைத்தியர் சந்தனம் சமூகசேவை மற்றும் கலையின்பம் இவ்விரண்டிலும் ஒரு சமநிலைத் தன்மையைப் பேண விரும்புவதாக நான் பின்னர் உணர்ந்துகொண்டேன்.

சமூக சேவையின் தொடர்ச்சியாக நான் கௌரி பழனியப்பனுடன் (முன்னாள் விரிவுரையாளர் - கொழும்புப் பல்கலைக்கழகம்) சேர்ந்து சில பணிகளைச் செய்யலானேன். அத்துடன் களத்தில் சென்று பணிகளை மேற்கொள்ளக்கூடிய களப்பணி யாளர்கள் அல்லது பொருத்தமான நபர்கள் இல்லாமையால் சமூக ஆராய்ச்சி குறித்த முக்கியப் பணிகளை ஆற்றக் கஷ்டப்பட்டோம். இருந்தும், வைத்தியர் சந்தனம் நிறுவனம் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்வதற்காக மிகச் சாதுரியமாகச் செயற்பட்டோம்.

மேலும் நாங்கள் ரமேஸ் ஊடாக ஐக்கிய இராச்சியத்திலிருந்து பெறுமதி மிக்க கிரிக்கெட் உபகரணத் தொகுதியொன்றைப் பிரின்சஸ் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுத்தோம். இது அவர் எங்களுக்கு செய்த மிகப் பெரிய உதவியாகும். அத்துடன் முத்து, மணி ஆகிய இருவரும் தனிப்பட்ட முறையில் உதவுவதற்காக முன்வந்தனர். இவ்வுதவி மலையக மக்கள் ஒன்றிய அனுசரணையுடன் கிடைத்த பாரிய அபிவிருத்தி நிதியாகும். அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தற்போது நான் எனது பிள்ளைகளுடன் கொழும்பில் வசித்து வருகிறேன். வாழ்க்கையில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தவனாகவும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தவனாகவும் நான் இருந்துள்ளதுடன், எதிர்நீச்சல் போட்டு அவற்றில் வெற்றியும் கண்டிருக்கின்றேன். பசுமையான நினைவலைகளைத் தற்போதும் மீட்டுப் பார்க்கிறேன். எல்லாம் மனதுக்கு சுகமே.



# அழகியலை முன்னிலைப்படுத்தும் அனுபவம் மிக்க படைப்பாளி

## குப்பிழான் ஐ.சண்முகன்

**ஆளுமைகளின் அடையாளம்**

பாவேந்தல் பாலமுனை பாறூக்

அனுபவம் மிக்க எழுத்தாளராக, மூத்த இலக்கிய ஆளுமையாக ஈழத்தின் இலக்கியப் பெருவெளியில் முக்கியத்துவம் பெற்றிருப்பவர் குப்பிழான் ஐ.சண்முகன். அழகியல் சார்ந்த படைப்புகளை, கலைத்துவ நுட்பத்தோடு தருகின்ற தனித்துவமான படைப்பாளியென்ற அடையாளம் அவருக்கு உண்டு.

1965இல் க.பொ.த உயர்தரம் கற்கும் காலத்திலிருந்தே எழுத்துலகில் நுழைந்த அவர், கலாபூர்வமான கதைசொல்லியாக, யாப்பறிந்த பாவலராக, ஆன்மீகச் சொற்பொழிவாளராக, திறனாய்வாளராக, பத்தி எழுத்தாளராக, நாடக, திரைப்பட விமர்சகராக நன்கு அறியப்பட்டிருப்பவர். ஆரம்ப காலத்தில் யாழ். கலை, இலக்கிய நண்பர் கழகத்தின் உறுப்பினராக இருந்து கலை, இலக்கிய ஆற்றலைப் புடம் போட்டுக் கொண்டவர்.

பிற்காலத்தில் சிறந்த கலை, இலக்கியவாதிகளாகப் பிரகாசித்த மாவை நித்தியானந்தன், ஆ.மகாதேவன், வே.தேவதாசன், சிவஞானசுந்தரம், சிலோன் விஜயேந்திரன், பூ.செல்லத்துரை ஆகியோரை நண்பர்களாகக் கொண்டிருந்தவர். அவர்களோடு இணைந்திருந்து இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்தவர். 'இலக்கிய இன்பம்' என்ற கையெழுத்து சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து 12 இதழ்களை வெளியிட்டவர்.

ஈழத்தின் இலக்கிய அறிஞர்களாகப் பெயர் பதித்திருந்த கனகசெந்திநாதன், கவிஞர் அம்பி, டொமினிக் ஜீவா, நாவேந்தன், இ.நாகராஜன் போன்றவர்களோடு ஏற்படுத்திக் கொண்ட இலக்கிய சந்திப்புகள், பேராசிரியர் கா.சிவத்தம்பி, கவிஞர் முருகையன், கே.எஸ்.சிவகுமாரன் போன்றவர்களோடு நடந்த இலக்கியக் கலந்துரையாடல்கள் என்பன தனது இலக்கிய முயற்சிகளுக்கு உத்வேகமளித்ததாக நன்றியோடு நினைவு கூர்பவர்.



ஆறு தசாப்த கால இலக்கியப் பயணத்தில் ஈழத்தின் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஆக்கங்களைத் தந்திருப்பவர் அவர்.

செய்நேர்த்தி மிக்க படைப்புகளுக்கு எடுத்துக் காட்டாக அவரின் படைப்புகளை இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

சிறுகதைகள், கவிதைகள், பத்தி எழுத்துகள் என்று பல்துறை சார்ந்தும் ஏழு நூல்களை அவர் படைத்தளித்திருக்கிறார்.

1. கோடுகளும் கோலங்களும் - சிறுகதை (அலை வெளியீடு - 1975)
2. சாதாரணங்களும் அசாதாரணங்களும் - சிறுகதை (நர்மதா வெளியீடு, இந்தியா - 1984)
3. அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள் - பத்தி எழுத்து (நிகரி வெளியீடு - 2003)
4. உதிரிகளும்... - சிறுகதை (புதிய தரிசனம் வெளியீடு - 2005)
5. பிரபஞ்ச சுருதி - கவிதை (சித்தம் அழகியார் வெளியீடு - 2014)
6. ஒரு பாதையின் கதை - சிறுகதை (காலச்சுவடு வெளியீடு, இந்தியா 2012)
7. ஒரு தோட்டத்தின் கதை - சிறுகதை (ஜீவநதி வெளியீடு - 2018)



கலை, இலக்கிய, ஆத்மீகப் பணிகளுக்காக அவர் பெற்றிருக்கின்ற விருதுகள் பல.

★ அரச கலை இலக்கிய உயர் விருதான 'கலாபூஷணம்' விருது.
★ பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் வழங்கிய 'சங்கச் சான்றோன்' விருது.
★ வடமராட்சி வலய கல்வித் திணைக்களம் வழங்கிய 'கலை வாரிதி' விருது.
★ குப்பிழான் - சிங்கப்பூர் கந்தையா கிருஷ்ணன் நல்லுறவு மன்றம் வழங்கிய 'சமூக திலகம்' விருது.
★ குப்பிழான் சிவபூமி அறக்கட்டளை வழங்கிய 'இலக்கிய ஞான ஜோதி' விருது என்பன அவற்றுட் சில.

கொழும்பில் கடமையாற்றிய காலத்தில், கொழும்பு கலை, இலக்கிய நண்பர் கழகத்தில் அங்கம் வகித்ததோடு, மாவை நித்தியானந்தன், அ.யேசுராசா, நெல்லை க.பேரன், தில்லைக்கூத்தன், ஐ.சாந்தன், ஸ்ரீரத சர்மா, இராஜி இராசகோபாலன், இராசேந்திரம் போன்ற நண்பர்களோடு இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர் குப்பிழான் ஐ.சண்முகன். 'அலை' என்ற மாற்று இலக்கிய சஞ்சிகையை நண்பர்களோடு சேர்ந்து வெளியிட்டதோடு, அதன் இணை ஆசிரியர்களில் ஒருவராகவும் 12 இதழ்கள் வரை இயங்கியவர். ''புறச் சூழலையும் நிகழ்வுகளையும் தனது படைப்புகளில் நுட்பமாகப் பதிவு செய்பவராயினும், அடிப்படையில் அவர் ஓர் அகமியவாதி. ஆத்மீக நம்பிக்கைகளும், மெல்லுணர்வுகளும், இரசனைத் திளைப்பும் கொண்டவர். இலக்கியவாதிகளிடையே பரவலாகக் காணப்படும் ஹீரோத்தன மேட்டிமைத் தன்மைகள் இல்லாதவர். அடக்கமும் ஒதுங்கும் தன்மையும் கொண்டவர்'' என்று எழுத்தாளர் அ.யேசுராசா, குப்பிழான் ஐ.சண்முகன் பற்றிக் குறிப்பிடுவார். அவருடைய கதைகள் குறித்த பார்வைகள் இலங்கையின் பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

''மொழிக்கும் வடிவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து அழகியலை முன்னிலைப்படுத்திய படைப்பாளர்களில் ஒருவராக குப்பிழான் ஐ.சண்முகன் இருக்கிறார். தனிமனித உறவுகளையும் உறவுச் சிக்கல்களையும் அக உலகையும் பேசுவதிலும் அதற்கான மொழி நடையைக் கையாண்டு, அழகியல் ரீதியான ஓர் இலக்கியச் செல்நெறியை உருவாக்கிய இலக்கிய முன்னோடிகளில் ஒருவராகவும் அவர் திகழ்கிறார்'' என்று 'ஜீவநதி'யில் அருண்மொழி வர்மனும் ''ஈழத்தின் மூத்த கதை சொல்லிகளில் ஒருவரான குப்பிழான் ஐ.சண்முகன், திரைமொழி, ஒளிப்பதிவு பற்றிய பிரக்ஞை உள்ளவர். அவரின் பெரும்பாலான கதைகளில் அவர் காட்சிகளை தேர்ந்த ஒளிப்பதிவாளன் போன்று நகர்த்தியிருப்பதை அவதானிக்க இயலும்'' என்று இணையச் சஞ்சிகையில் அனோஜன் பாலகிருஷ்ணனும் குறிப்பிடுவர். குப்பிழான் ஐ.சண்முகன் கவிதைகளாலும் இலக்கிய உலகில் பேசப்படுபவர்.

''குப்பிழான் ஐ.சண்முகனின் கவிதைகள் எல்லாமே யாப்பமைதிக்குட்பட்ட மரபுவழி வந்தவை. அனுபவங்களைக் கவிதையாக்குபவர் அவர். நித்திரையை ஒரு பெண்ணாக உருவகித்துப் பாடுகிறார். கனவில் பூம்புகாரில் உலா வருகின்றார். அவருக்குச் சேவையாற்றிய தாதிகளைப் பாடுகின்றார். பேராதனை முருகனுக்கு ஆற்றுப்படை படிக்கின்றார்'' என்று 'பிரபஞ்ச சுருதி' என்ற அவரின் கவிதை நூல் குறித்து கருத்துக் கூறிய கவிஞர் த.ஜெயசீலன் குறிப்பிடுகின்றார்.

குப்பிழான் சண்முகன் சிறந்த சொற்பொழிவாளராகவும் நன்மதிப்புப் பெற்றிருப்பவர். ஆசிரமங்களிலும் கோயில்களிலும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துபவர். நூல் அறிமுகக் கூட்டங்களில் உரையாற்றுபவர். இரசனைக் குறிப்புகள் தருபவர். திரைப்பட, நாடக விமர்சனங்களை வழங்குபவர். வானொலியில் இலக்கியக் கலந்துரையாடல்களில் ஈடுபடுபவர்.

ஐயாத்துரை சண்முகலிங்கம் என்ற இயற்பெயரை உடைய அவர், குப்பிழானில் தம்பையா ஐயாத்துரை - இரத்தினம்மா ஐயாத்துரை தம்பதியின் மகனாக 1946இல் பிறந்தவர்.

குப்பிழான் விக்கினேஸ்வரா வித்தியாலயம், புன்னாலைக் கட்டுவன் மெதடிஸ்த மிஷன் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி என்பவற்றில் கற்றவர்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்...)

# 'எல்லாமும் ஒன்றல்ல' கட்டுரை நூல் வெளியீடு

கல்முனை வியூகம் கலை - இலக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் எழுத்தாளர் உமா வரதராஜன் எழுதிய 'எல்லாமும் ஒன்றல்ல' கட்டுரை நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை (12-03-2023) மாலை கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் முன்னாள் பேராசிரியர் செ.யோகராராசா தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இந்நூலைப் பதிப்பித்துள்ளது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் வெளியீட்டுரையை நிகழ்த்தி முதற்பிரதியை வெளியிட்டுவைத்தார்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியரும் மூத்த ஊடகவியலாளருமான க.குணராசாவுக்கு நூலாசிரியர் உமா வரதராஜன் நூலின் முதற்பிரதியை வழங்கி கௌரவித்தார். உமாவின் பேரப்பிள்ளைகள் இவருக்கு மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் டி.ஜே.அதிசயராஜ், டொக்டர் திருமதி புஷ்பலதா லோகநாதன், கவிஞர் சோலைக்கிளி, எழுத்தாளர் மன்சூர் ஏ.காதர், சபா சபேஷன், வாசுதேவன், சிவ வரதராஜன், சஞ்சீவி சிவகுமார், பி.சஜிந்ரன் ஆகியோர் உரையாற்றினார்கள். ச.கஜனா நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

**வெளியீட்டுரை:- சரவணமுத்து நவநீதன்**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் காத்திரமான செயற்பாடுகளில் கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தல் என்பது பெறுமதி வாய்ந்த பணியாகும். காத்திரமான கருவைக்கொண்ட கையெழுத்துப் பிரதிகளையும் தமது கையெழுத்துப் பிரதிகளை வெளியிடுவதற்கு பொருளாதார ரீதியான இடர்பாடுகளை எதிர்நோக்கும் கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளையும் நூலுருவாக்கம் செய்யும் செயற்பாடு வருடா வருடம் நடைபெற்று வருகிறது.





உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று ஏனைய விடயங்களைப் போலவே பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகளையும் முடக்கிப் போட்டது. எனினும், கிழக்கு மாகாண கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலுருவாக்கம், சிறந்த நூல் தெரிவு, நூல் கொள்வனவு என்பன கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

'எல்லாமும் ஒன்றல்ல' எனும் இந்நூலின் நூலாசிரியர் உமா வரதராஜன் தனது விரிந்த சிந்தனை, பரந்த அனுபவம் என்பவற்றுடன் கூடிய மொழி வாண்மை மூலம் இந்நூலைப் படைத்துள்ளார். இப்படைப்பு வாசகர் நுகர்விற்கு மிகவும் பொருத்தமானது என நம்புகின்றேன். அந்தவகையில் இப்படைப்பை மேற்கொண்ட நூலாசிரியரைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் இத்துறையில் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்.

**சபா சபேஷன்:-**

ஓர் எழுத்தாளனின் எழுத்துகள் வாசகர்களை வாசிக்கத் தூண்டுபவையாக மட்டும் இருந்துவிட்டால் போதாது. அந்த எழுத்தின் நேர்த்தியான கையாடல், அதன் படிமங்கள், வாசகனை ஆரோக்கியமான இன்னொரு தளத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும். ஓர் உத்வேகத்தை வாசகனுக்கு ஏற்படுத்த வேண்டும். எழுத்தார்வம் உள்ளவர்களை அந்தப் படைப்பு எழுதவும் தூண்ட வேண்டும்.



ஒரு சிறந்த படைப்பாளன் ஏனையோரின் எழுத்துகளுக்கு ஊக்கமளித்து அவர்களுக்கு களமமைத்துக் கொடுப்பதிலும் தனது பங்கையாற்றுவான். ஆனால், சகட்டுமேனிக்கு தொடர்ந்து எழுதுகிறோம் என்ற பேர்வழிகளையும் எழுத்தாளன் என்ற போர்வையில் கவிஞன் என்று பெயர் வாங்கி விட வேண்டும் என்று அலைகின்றவர்களையும் கைதூக்கி விடுவது என்பது நகைப்பிற்குரிய ஓர் இலக்கியத் துரோகமாகும்.

இந்த வகையில் தரமான எழுத்துகளை படைப்பதோடு மட்டுமன்றி, தன்னை முழுமையாக அர்ப்பணித்து தனது எழுத்தின் மீதான அதீத நம்பிக்கையில் சளைக்காது இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வரும் நண்பர் உமா வரதராஜனைப் பாராட்டுகின்றேன். இவர் தனது 'வியூகம்' சஞ்சிகையின் மூலம் இளையவர்களுக்கு களமமைத்துக் கொடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

விமர்சனம், திறனாய்வு, ஆய்வுக்கட்டுரை, வரலாற்று நூல் வெளியீடு என்ற பெயரில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், கோஷ்டிப் பூசல்கள், தனிமனித துதிபாடல்கள், ஊடக காழ்ப்புணர்வு, தன்முனைப்புடனான வெளிப்பாடு என்பன அரசியலில் மட்டுமல்ல, ஈழத்து இலக்கியத்தையும் சீரழித்து நிற்கின்றது. இன்றைய ஈழத்து இலக்கிய உலகு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதை வேதனையுடன் கூறவேண்டியுள்ளது.

**சஞ்சீவி சிவகுமார்:-**

உமா வரதராஜன் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகவே 'எல்லாமும் ஒன்றல்ல' என்ற இக்கட்டுரை நூல் வெளிவந்திருக்கின்றது. மதிப்பீடுகள், ஆளுமைகள் பற்றிய குறிப்புகள், நினைத்தல் குறிப்புகள், அஞ்சலிக் குறிப்புகள், விமர்சனப் பார்வை நூல்களுக்கான முன்னுரைகள் என 40 கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

இந்நூல் உமா வரதராஜன் தான் எழுதிய வையும் பேசியவையும் என அமையும் ஆக்கங்களில் தன் கைவசத்தில் எஞ்சியிருந்த கட்டுரைகளின் தொகுப்பாகவே இதனை அறிமுகப்படுத்தியிருக்கிறார். தான் எழுதிய அல்லது ஆற்றிய உரைகளின் பல கட்டுரைக் குறிப்புகள் காலப்போக்கில் கைநழுவி விடுகின்ற அவலம் உமா வரதராஜனுக்கும் நிகழ்ந்திருக்கிறது. இது பெற்ற குழந்தை ஒன்றை இழந்து தாய் தவிக்கும் துயரம். அவரது முன்னுரையாக அமைந்த செருமலுக்குள் இந்த இழப்பின் பொருமலையும் காது கொடுத்துக் கேட்கும் போது உணர முடிகிறது.



இப்புத்தகத்தில் உள்ள பல கட்டுரைகளை அவரது இலக்கிய செயற்பாடுகளோடு ஊடாடியவர்கள் நேரடி உரைப் பேச்சாக அவரது குரலிலேயே கேட்டு இன்புற்றிருக்கிறோம். கட்டுரைகளாக இதற்கு முன்னரே நூல்களில் அல்லது சஞ்சிகைகளில் வாசித்தும் இருக்கிறோம். இவற்றில் சில உரைகள் அதன் உள்ளடக்கம், மொழி என்பவற்றுக்காக இன்னுமொருமுறை கேட்க அல்லது வாசிக்க எதிர்பார்ப்புடனும் இருந்திருக்கிறோம். அந்த எதிர்பார்ப்பை இந்நூல் நிறைவு செய்கிறது.



உமா வரதராஜன் தன் எழுத்துகளின் மூலம் ஈழத்து இலக்கியப் பரப்பில் தனக்கென ஒரு தனித்துவமான தடத்தைப் பதித்து வைத்திருக்கின்றார். நூல்களில் பொதுவாக கட்டுரை எனும் வடிவத்திற்கு நாம் கொடுக்கும் அழகியல் முக்கியத்துவம் குறைவானதே. கட்டுரைகளுக்கு அழகியல் சுவையில்லை என நினைத்துக் கொண்டு வெறும் உலர்ந்த வைக்கோல் தீனியாக அதை நமக்கு தருபவர்களும் உண்டு.

உமா வரதராஜனின் எழுத்துகளில் அதன் உருவவியலிலும் கட்டமைப்பிலும் பாரம்பரிய மரபு வழியான வடிவங்களில் இருந்து மாறுபட்டு நிற்கும் தன்மையைக் காணமுடிகிறது. சொற்சிதையாத பல படிமங்களை நம் கண்முன்னே காட்சிப்புல வடிவமாக ஆக்குகிறார். அவரது அனுபவத்தில் பதிவாகிய ஆளுமைகளின் புறவய இயல்புகளின் உருவகமாயினும் சரி, ராகமையின் வீதிச்சந்து ஒன்றின் வர்ணனைபோல வரும் காட்சிப் புலமாயினும் சரி, அவர் வரையும் சித்திரம் வியப்பூட்டுவதாயிருக்கும்.




பேராசிரியர் மௌனகுரு, வானொலி மாமாவாக கலகலத்து நிற்பதும் மஞ்சள் கோட்டுக் கடவையில் எழுத்தாளனைக் கைபிடித்து கரைசேர்க்கும் காவலனாக யோகராசாவைக் காட்டுவதும் எடுத்துக் காட்டுகள். ஒரு தேர்ந்த ஓவியன் காட்சிப்புலம் ஒன்றை படம் பிடித்து வரைவது போல் இவை மனதில் முட்டும்.உமா வரதராஜனின் எழுத்துகள் அதன் இலக்கை சரியாக குறி வைத்த அம்பைப் போன்று நேராகப் பாய்வன. ஒளித்து மறைத்து ஓரச் சாயலுடன் வந்திறங்குபவையல்ல.

**கலாபூஷணம்**
**பி.எம்.எம்.ஏ.காதர்**

# ஈழப்பெண் போராளி கவிதைகளும் சங்க இலக்கியத்தில் பெண்களும்

புறநானூற்றை விஞ்சிய வீரம் படைத்த ஈழப்பெண் கவிஞர்களின் படைப்புகள் வரலாற்றின் பக்கங்களில் முழுமையாக பதியப்படாவிடினும் களமாடி, தியாகித்த மங்கையரை தமிழ் கூறும் உலகம் ஒருபோதும் மறவாது. போர்க்கள இலக்கியத்தின் பெருமைக்கு சான்றாக அவர்களின் படைப்புகளே இலக்கிய சாட்சியங்களாகப் பகர்கின்றன.

அநீதி என்றால், அறம் தவறினால் அடங்காதே, அவனை எதிர்த்துப் போராடு என்பதை போதிப்பதுதான் தமிழ் இலக்கியங்களின் அடிப்படைக் கோட்பாடாக அமைகிறது.

தமிழ் மொழி எப்போதுமே பெண்களை உயர்த்தியே கொண்டாடுவதை காப்பியங்களிலும் காவியங்களிலும் காணலாம்.

## பெண்களும் சங்க இலக்கியமும்

இதற்கு மாறாக வடமொழிகள் பெண்களை அடிமைத்தனமாக்குவது, ஆணுக்குக் கட்டுப்பட்டவள் போன்ற நெறிமுறையில் மத ரீதியாகவும் இலக்கியங்கள் மூலமாகவும் சாட்சிப்படுத்தியுள்ளன.

உலகம் முழுவதுமே பெண்களைக் காலுக்கு கீழே வைத்திருந்த காலகட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷமாக போற்றிப் புகழ்ந்தது தமிழ் சமூகமும் தமிழ் இலக்கியமும் என்பது காப்பியங்கள் மூலம் மேலும் வலுப்பெறுகிறது.

சங்க கால இலக்கியங்களுக்கு ஒப்பாக, ஏன் அதனிலும் மேலாக ஈழத்துப் பெண் போராளிக் கவிஞர்களின் படைப்புகள் தமிழரின் வீரத்தையும் வாழ்வியலையும் உலகிற்கு பறைசாற்றுகின்றன.

## ஈழப்பெண் போராளிக் கவிஞர்கள்

ஈழத்துப் பெண் போராளிக் கவிஞர்களில் பலராலும் அதிகம் அறியப்பட்ட, போர்க்களத்தில் அடையாளப்படுத்தப்பட்ட கவிஞர்களான அம்புலி, ஆதிலட்சுமி, கஸ்தூரி, வானதி, பாரதி, அலையிசை, மலைமகள், தூயவள், நாமகள், சூரியநிலா, சுதாமதி, தமிழவள், காந்தா, ஜெயா, கலைமகள், கனிமொழி, ஞானமதி, புரட்சிகா, நகுலா, நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபி, தயாமதி, சிரஞ்சீவி, கிருபா போன்றோரின் படைப்புகள் ஈழப்போரின் வீர வரலாற்றை, உயர்த் தியாகத்தை உலகிற்கு வெளிக்காட்டியுள்ளன.

அன்றைய சங்க இலக்கியங்களில் புலியை, யானையை விரட்டிய பெண்களின் வீரமும் போருக்குத் தன் கணவன், மகன் என ஒருவர் பின் ஒருவராக அனுப்பி வைத்த பெண்களின் வீரமும் விதந்து போற்றப்பட்டுள்ளன. அக்காலத்தில் பெண்கள் போர்க்களத்தில் போரில் ஈடுபடுத்தப்பட்டமை பற்றிய சான்றுகளும் நூல்களும் இல்லை என்றே கூறலாம். ஆயினும், போர் நிறைவுற்ற பின் போரில் புண்பட்ட வீரர்களை, கணவனைக் காத்து, காவல் செய்த பணிவிடை தரவுகள் உள்ளன.

ஆனால், ஈழத்துப் பெண் போராளிக் கவிஞர்கள் வாழ்வானது, குருதிக்களத்தில், எந்த நேரத்திலும் இறப்பு நேரிடலாம் என்ற சூழலிலும் அருகிருக்கும் களத்தோழி எப்போதும் களத்தில் வீழலாம் என்ற தியாக உணர்வில் படைக்கப்பட்ட கவிதைகள் நிகழ்கால வாழ்வை பேசுகின்ற இலக்கியங்களாக உருப்பெற்றுள்ளன.

## விடுதலை வேட்கைமிகு கவிஞர்கள்

அதேவேளை யுத்தத்தின் பின்னர், பாதிக்கப்பட்டு அங்கவீனமுற்று உயிருக்குப் போராடும் நிலையிலும் தாம் வாழவேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டவர்களாகவும் தமது மனோ தைரியத்தையும் விடுதலை வேட்கையையும் கைவிடாத வீர உணர்வும் தைரியமும் மிக்கவர்களாக தம்மை இனங்காட்டுவதோடு, தமது சுயத்தையும் நம்பிக்கையையும் இழக்காதவர்களாக இப்பெண் போராளிக் கவிஞர்கள் மிளிர்ந்துள்ளனர்.

இப்பெண் போராளிகளின் கவிதைகளில் தாம் எவருக்கும் அடங்கி, அடிமைப்பட்டுப் போகாத, இலக்கை அடைவதையே நோக்காகக் கொண்ட, தமது சுயத்தை இழக்காத தன்மையை அவதானிக்கலாம். அம்புலி எனும் பெண் போராளியின் கவிதை 'பெயரிடாத நட்சத்திரங்கள்' தொகுப்பில் வெளியாகியுள்ளது. அதனில்

***"எத்தனை களங்கள் கண்ட***
***என் கால்கள்***
***கனத்த கருவியை***
***தோளில் சுமந்து***
***தொலைதூரம் எதிரியை***
***விரட்டிய கரங்கள்"***

என இலக்கை அடையும் மனோதிடத்தை சிறப்பாக விளங்கின.

இதற்கு மாறாக கீழடி போன்ற இடங்களில் இருந்து கிடைத்த தங்கத்திலும் பானை ஓடுகளிலும் பெண்களின் பெயரைப் பொறித்து புழங்குமளவிற்கு தமிழ் சமூகம் நாகரிகம் கொண்டது என்பது அகழ்வாராய்ச்சிகளில் வெளிப்பட்டுள்ளது.

சங்ககால இலக்கியங்களை மிஞ்சும் வண்ணம் போராளிக் கவிஞர்கள் தமது வீரம் செறிந்த செயற்பாடுகளையும் போரியல் வாழ்வின் கோலங்களையும் பல்வேறு புதிய அனுபவங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

பெண் போராளிகளின் கவிதைகள் யுத்தகளத்தில் நேரடியாக பங்கு கொண்ட வீரப்பெண்களின் வல்லமையையும் போரிடும் திறமையையும் வீர உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. போராளிப் பெண்களின் போரியல் வாழ்வை துல்லியமாகப் படம்பிடிக்கின்றன.

சங்க காலத்திலேயே, 47 பெண் எழுத்தாளர்களைக் கொண்டது உலகிலேயே தமிழ் சமூகம் மட்டும்தான். உலக மொழிகளின் தாய் என்று கூறிக் கொள்ளும் கிரேக்கத்தில் கூட 7 பெண்கள்தான் உண்டு. அப்படியாக ஆண்டாண்டு காலமாக பெண்களை போற்றிப் புகழ்ந்து கொண்டாடியது நம் தமிழ் இலக்கியமே என்பதில் ஐயமில்லை.

ஆனாலும், போர்க்கள கவிஞர்கள் தாம் எவருக்கும் அடங்கி, அடிமைப்பட்டுப் போகாத, இலக்கை அடைவதையே நோக்காகக் கொண்ட, தமது சுயத்தை இழக்காத தன்மையை அவதானிக்க முடிகின்றது.

## போரியல் வாழ்வு

இப்பெண் கவிஞர்கள் இயற்கையை, அதன் அழகை நோக்கிய விதம் ஏனைய கவிஞர்களின் நோக்கிலிருந்து வேறுபட்டவையாக அமைகின்றன. பனைமரம், கடல், மழை போன்ற இயற்கையின் வர்ணனைகள் போரியல் வாழ்வுடன் தொடர்புபடுத்தி நோக்கப்படுகிறது.

தாய்மை, குழந்தைப்பேறு, பாலூட்டல், கருவறை, தொப்புள் கொடி, ஈன்றெடுத்தல் போன்ற பெண்மையுடன் தொடர்புடைய விடயங்கள் இவர்களது கவிதைகளில் ஆங்காங்கே வெளிப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. கவிஞர் அம்புலியின் கவிதைகளில் இவ்வுணர்வுகள் அதிகம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

நான் எப்போதும் மரணிக்கவில்லை, வாழ்க்கை ஓர் இனிய பாடலாகட்டும், தேடியடைவாய் போன்ற கவிதைகளில் இதனைக் காணலாம்.

போராளிப் பெண் கவிஞர்கள் ஆணாதிக்கம், அநீதி, அடக்குமுறை, பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வு போன்றவற்றுக்கு எதிராகவும் சிறுவர் துஷ்பிரயோகம் அரச ஒடுக்குமுறை, இராணுவத்தின் கெடுபிடிகள் போன்றவற்றுக்கு எதிராகவும் குரல் கொடுத்துள்ளதோடு, ஐ.நா. சபையையும் தங்கள் கவி வரிகளில் விமர்சித்துள்ளனர்.

போரிடும் பெண்களின் தீர்க்கமான குரலாக ஒலித்த ஈழப்பெண் கவிஞர்களின் படைப்புகள் எத்தனை காலம் சென்றாலும் உயிர் வாழும். ஏனென்றால், அக்கவிதைகளின் மூச்சொலி இன்னமும் அடங்கவில்லை. என்றும் உயிர்ப்பாக தாயக மண்ணில் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

## அழகியலை முன்னிலைப்...

இலங்கைப் பல்கலைக்கழக (கொழும்பு, கண்டி) கலைப்பட்டதாரியும் யாழ். பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா பட்டதாரியுமான ஆசிரியை புனிதவதி மயில்வாகனம் அவரின் மனைவியாவார்.

1968 முதல் எழுதுவினைஞராக பரீட்சைத் திணைக்களம், கல்வித் திணைக்களம் என்பவற்றில் கடமையாற்றி, பின்னர் 1984இல் ஆசிரிய சேவையில் இணைந்து நெல்லியடி மத்திய வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி 2006இல் ஓய்வுபெற்றவர். 22 வருட ஆசிரிய சேவையில் காத்திரமான மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமை அவருக்குண்டு.

அண்மையில் நாடு திரும்பியிருந்த பாவலர் பொலிகையூர்க் கோகிலா, (குப்பிழான் ஐ.சண்முகனின் மாணவி) தனது நூல் வெளியீட்டு



விழாவுக்கு ஆசான் குப்பிழான் ஐ.சண்முகனை அழைத்து மரியாதை செலுத்தி, வாழ்த்தியிருந்ததை அவரின் முகநூல் (26-02-2023) பக்கத்தில் 'தமிழ் இமயம் வாழ்க' என்ற தலைப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்.

''அமிழ்தாம் மொழியின் உயர்வைத்தான்
அறிவாய் ஊட்டும் நல்லாசான்
தமிழை நன்றே கற்பித்தார்
தரணி போற்றும் சண்முகனார்
நிமிர்ந்தார் இமயம் என்றேதான்
நிலைக்கும் நாவல் பல தந்தார்
தமிழின் சேவை மனங்கொண்டார்
தாளைப் போற்றி வாழ்த்துகிறேன்
மதிப்பில் உயர்ந்த நெல்லியடி
மத்திய வித்தியாலயத்தில்
பதித்த எங்கள் பாதங்கள்
பாதை காண நடைபோட்டோம்
இதிகாசங்கள் இலக்கணங்கள்
இனிய தமிழின் வளமெல்லாம்
முதிசமென்றே எமக்களித்த
மூன்று தமிழை வாழ்த்துகிறேன்''

அனுபவம் மிக்க எழுத்தாளர், நல்லாசான் குப்பிழான் ஐ. சண்முகனை, அவரின் மாணவி கோகிலாவோடு சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம். தேகநலத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ்க. கலை, இலக்கிய ஆன்மீகப் பணி தொடர்க. வாழ்த்துகள்!

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7